**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியது**

# இந்து என்ற சொல்லும், இந்துமதம் எனும் வாழ்வியல் முறையும் தமிழருடையவே!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 **மார்கழி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **"அருளாட்சி அமைப்பு எழிச்சிநிலை அறிவிப்பு"** - குருதேவர் செந்துறை என்ற ஊரைச் சேர்ந்த தமது சித்தரடியான் திரு சுடாலின் அவர்களுக்கு 8/12/1985இல் எழுதிய குருவாணை மடலுடன் அவர்கள் செயல்படுவதற்கான அறிவிக்கையும் உள்ள நகல்.
2. **"இந்து என்ற சொல்லும், இந்துமதம் எனும் வாழ்வியல் முறையும் தமிழருடையவே!"** - குருதேவர் புதிய அறிமுகத்தாராக வந்த சின்னமனூர் திரு சுப்பிரமணியம் என்பவருக்கு 4/10/1985இல் எழுதிய கருத்து விளக்க மடல்.
3. **"திருவோலை"** - குருதேவர் பம்பாய் எனப்பட்ட மும்பையில் இருந்த சுந்தரராமனுக்கு தமிழகத்தில் உள்ள இயக்கத்தின் செயல்நிலைகளை சுருக்கமாகத் தெரிவித்து 15/11/1985இல் எழுதிய இரு பக்க மடல்.
4. **"தனிமனித விமர்சனச் செயல்திட்ட முடங்கல்"** - அடியான்களின் செயல்நிலைகளில் திருத்தம் வழங்கும் விதமாக குருதேவர் தமது திருமந்திற ஓலைநாயகம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு 26/8/1985இல் எழுதிய மடல்.
5. **"அருள்நிலையோடு அறிவு விழித்த நிலையில் செயல்பட வேண்டும்!"** - குருதேவர் தமது குருவாணை ஓலைநாயகம் மூலம் பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு 4/11/1985இல் இப்போதைய காலக்கட்டத்தில் மக்களுக்கு இடையில் எப்படிச் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தி எழுதிய விளக்க மடல்.
6. **"செயல்நிலை மேம்பாட்டுப் பரிந்துரைகள்"** - தமது அடியான்கள் அனைவருக்கும் குருதேவர் 21/12/1985இல் எழுதிய இயக்கச் செயல்நிலைகள் குறித்த பரிந்துரைகள் அடங்கிய மடல்.

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# அருளாட்சி அமைப்பு எழிச்சிநிலை அறிவிப்பு

பதினெண்சித்தர்கள் தங்களது தாய்மொழியான அண்டபேரண்டமாளும் அமுதத் தமிழில் 43,73,086 ஆண்டுகளுக்கு முன் வழங்கிய இந்துமதத்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும். இதுவே இம்மண்ணுலகின் முதல் மதம், மூல மதம், தாய் மதம். இதன் குழந்தைகளாகவே அனைத்து அருள்நிலையங்களும், அருளாளர்களும் தோன்றினர். எனவேதான், இந்துமதத்தின் மூலம் மதச் சண்டை சச்சரவுகளின்றி அனைத்து மதங்களும் இணைந்து மனித வாழ்வில் ஒற்றுமை, அமைதி, நிம்மதி, நிறைவு, தோழமை, நட்பு, சமத்துவம், பொதுவுடமை, கூட்டுறவு, உலக ஆன்மநேய ஒருமைப்பாடு, ... முதலியவைகளை உருவாக்கும் முயற்சி துவக்கப்பட்டுள்ளது. இதுவே அருளாட்சி அமைப்புப் பணி.

பொருளுலக இருள்களை அகற்ற அருளாட்சியே வழி! அருளாட்சி அமைந்திட மெய்யான இந்துமதமே சாதனம்! மனிதனைக் கடவுளாக்குவதே சித்தர்களின் இந்துமதம்! அருட்கலைகளும், அறிவியல்களும் செழுச்சியுறுவதே அருளாட்சி முயற்சிப் பணியின் வழி! அருளை அநுபவப் பொருளாக அடைய கற்றிட வாரீர்! அனைத்து மதங்களிலும் அருளூற்று பெருகிடச் செய்வதே இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

நோயாளிகளும், பேயாளிகளும் நலம் பெறலாம்! வாரீர்! வாரீர்! வாரீர்!

**தொடர்பு:-**

1. பிரமாச்சாரியார் சி.கவிக்குமார், இந்து மறுமலர்ச்சி இயக்கம், 56, N.G.O.காலனி, பொன்னேரி-601204.

2. பரமாச்சாரியார் நெ.சேவுகன், C/O காதி வசுத்திராலயம், GRNS, கொட்டாம்பட்டி-625103.

3. குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர், ESI, செம்பியம், சென்னை-600011.

4. அருள்நிறை பாரத காலத்து பாஞ்சாலி என்னும் திரௌபதியின் சன்னிதானம் டாக்டர் அ.சுடாலின், செந்துறை, நத்தம் (வழி), அண்ணா மாவட்டம்-624403.

# அருளாட்சி அமைப்புப்பணி விரிவாக்கும் செயல்திட்டம்

சித்தர் நெறி வளர்க்க! வளமாக்க! வலிமைப்படுத்த! ஆட்சிநிலை பெறச் செய்ய முயலுபவர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்வதற்காக இந்த அறிக்கையில் 4வது முகவரியாக தங்களின் அருட்பட்டங்களோடு தெளிவாக அச்சிட்டு வழங்கிடல் வேண்டும். கோயில்களுக்கு, விழாக்களுக்கு, சுற்றுப்பயணங்களுக்கு, அருளுலகப் பயிற்சிகளுக்கு, அ.வி.தி. பணிகளுக்குச் செல்லும் நம்மவர்கள் உடனடியாக வசதி வாய்ப்புகளுக்கேற்பச் சில ஆயிரம் அறிக்கைகள் அச்சடித்தேயாக வேண்டும் - **குருவாணை.**

ஏடுகளின் இருட்டடிப்புகளை எதிர்த்தும், அறியாமைகளின் ஆக்கிரமிப்பையும், சூழ்ச்சிமிகு சுரண்டல்களின் மறைப்புகளையும், நாத்திக வெறியாட்டங்களையும், ... எதிர்த்து நம்மவர்கள் வேங்கையென ஆங்காங்கே செயலாற்றப் புறப்பட்டேயாக வேண்டும். அதற்கு இந்த ‘அருளாட்சி அமைப்பு எழிச்சிநிலை அறிவிப்பு’ பல்லாயிரக்

கணக்கில் அச்சிட்டேயாக வேண்டும். ஒவ்வொருவரும் ஓராயிரம் பிறதிகளாவது தலைமைப்பீடத்துக்கு உடனே அனுப்ப வேண்டும்.

பலரும் முழுநேர ஊழியராகச் சில சில நாட்களுக்காவது செயல்பட்டேயாக வேண்டும். அனைத்து மதத்தவரும் புரிந்திடும் வண்ணம் அருளை அநுபவப் பொருளாக வழங்கிட நமது அருளாளர்கள் செயல்பட, சிங்கமெனப் புறப்பட அருளுலகம் விடுக்கும் செயல்திட்டமே இது. - **குருவாணை.**

செயல்! செயல்! செயல்!

**அன்பு**
**குவலய குருபீடம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரூர்,**
**8.12.85.**

அன்பு நண்பர் டாக்டர் சுடாலின் (குரும்பபப்பட்டி) செந்துறை (P.O.), நத்தம் (Via), அண்ணா மாவட்டம் அவர்களுக்கு குருதேவர் எழுதுவது:

(1) தங்களுடைய 5.12.85 நாளைய அஞ்சல் 7.12.85 நள்ளிரவு பூசையில் வைக்கப்பட்டது. உங்களுக்கு மந்திரவாதிகளின் தொந்தரவுகளிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டுமென்றால் மதுரை மாநகர் (S.R.நீலமேகம்பிள்ளை, 8,அருள்தாசுபுரம், தத்தனேரி, மதுரை-625018) பெரியவர் நீலமேகம்பிள்ளைக்கு பதில் அஞ்சல் (Reply card) அட்டை அனுப்பி உங்களுடைய வரவுக்கு ஒப்புதல் பெற்று மதுரை மாநகர் செல்ல வேண்டும். செவ்வாய் பகலில் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திலும், இரவு மதுரை மாநகர் மக்களின் விருப்பப்படி யார் வீட்டிலாவது தங்கி அருட்கணிப்புப் பணியும், மறுநாள் தாத்தா பாண்டி முனீசுவரர் கோவிலுக்கும், இரவு தத்தனேரி

சுடலை பூசைக்கும், மறுநாள் திருப்பரங்குன்றத்துக்கும், மடப்புரத்தில் காளி கோவிலுக்கும் செல்ல வேண்டும். இப் பயணம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் நீடிக்கலாம். இது வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒருமுறை நடத்தலாம். மதுரை மாநகர் வட்டாரங்களுக்குள் என்று இல்லாமல், கொட்டாம்பட்டி காரியேந்தல்பட்டி குருகுலம் இல்லாமல் மற்ற எல்லா இடங்களுக்கும் செல்லலாம். ஆனால், சுடாலின் இடுப்பில் 4 முழ வேட்டியும், 6 முழ கச்சைத் துண்டும், தலையில் 12 முழம் என்று குருதி வண்ணச் சிவப்பில் ஆடை உடுத்தி ஒரு கையில் சிவலிங்கக் கொடி, ஒரு கையில் மயில் பீலியும் பிடித்து இருக்க வேண்டும். இவரது மனைவி சரோசினி தேவி முழுக்க முழுக்க அனைத்தும் குருதி வண்ணச் சிவப்பில் ஆடை உடுத்தி இருக்க வேண்டும். ஒரு கையில் திரிசூலமும், ஒரு கையில் மயில் பீலியும் வைத்திருக்க வேண்டும்.

இவர்களைப் போல பாண்டியனும், பாண்டியனது மனைவியும் சன்னிதான உடை அணிந்தால்தான் உங்களுடன் சுற்றுப்பயணம் செய்யலாம். <u>எச்சரிக்கை</u>. எனவே, சுடாலினும் இவரது மனைவியும் பல இடங்களுக்கு அருட்பயணம் செய்து அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் செயல்பட்டால்தான் அருளுலக செல்வாக்கைப் பெற்று மந்திரவாதிகளிடமிருந்து தப்ப முடியும்.

(2) மேற்படி செயல்திட்டம் போல் திருச்சி மாவட்டம் முசிறிக்கும், காரைக்குடி அகத்தியர் சன்னிதானத்துக்கும், திருநெல்வேலிக்கும் [(1) P.கிருட்டிணமூர்த்தி, 6, நேசநயினார் தெரு, பழைய மிலிடரி லைன், பாளையங்கோட்டை, நெல்லை-627002; (2) சித்தரடியான் சி.இரமேசு B.E. பொறுப்பாசிரியர், இயந்திரவியல், இலக்குமி அம்மாள் தொழில் நுட்பக் கல்லூரி, நாலாட்டின்புத்தூர்-627714, கோவில்பட்டி, நெல்லை மாவட்டம்; (3) செல்வம் கோனார், S/O சண்முகக் கோனார், 8, முருகேசப் பெருமாள் தெரு, பாளையங்கோட்டை, நெல்லை மாவட்டம்] இங்கு குறிப்பிட்ட

மூன்று பேருக்குக் கடிதம் எழுதி ஒப்புதல் பெற்று அங்குச் செல்ல வேண்டும். இதுமுதல் நீங்கள் அருட்பணி விரிவாக்கத் திட்ட தலைமைச் செயலாளர் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் (வீ.மா.ச.) நெ.சேவுகனுடன் அடிக்கடி அஞ்சல் தொடர்பு வைத்து உங்களுடைய சுற்றுப்பயணத்தை தெரிவித்து பாதுகாப்புகளை பெற்றுக் கொள்ளவும். அவர் மூலமும், உங்கள் சுற்றுப்பயணம் பற்றி அந்த வட்டாரங்களுக்கு அறிவித்து விட வேண்டும்.

**<u>குறிப்பு</u>:-** உடனடியாக இந்த அஞ்சலுக்கு பல நகல்கள் எழுதி (1) பரமாச்சாரியார் நெ.சேவுகன், (2) பிறமாச்சாரியார் சி.கவிக்குமார், (3) மதுரை மாநகர தலைமை அமைப்பாளர் V.சந்திரசேகரன் B.A., B.L., (115, புட்டுத்தோப்பு ரோடு, மதுரை-625010), (4) தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் வெ.செகதீசன், (மேலப்பொன்னகரம்-2வது தெரு, மதுரை-625010), (5) சுடலைச் சன்னிதானம் பெரி.முத்தையா, (14-A, பொன்னகரம் 4வது தெரு, பொன்னகரம் பிராட்வே, மதுரை-625010), (6) தாயுமானவர் சன்னிதானம் ம.சி.இராமன், (248K, இரயில்வே காலனி, மதுரை-625010), (7) அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் மு.இராமனுசதாசு, (12,காந்திபுரம் 5ஆம் வீதி, காரைக்குடி, ப.பொ.மு.தே.மாவட்டம்-623001), (8) அருள்மிகு பழனி ஆண்டவர் சன்னிதானம் R.இராமசாமி, (S/O ரெங்கசாமிக் கவுண்டர், 6/446, திருவள்ளுவர் நகர், சிறுமுகை, கோவை மாவட்டம்-641302), (9) ஓமாந்தூர் மாசிபெரியண்ணசாமி சன்னிதானம் க.பன்னிர்செல்வம், (டெலிபோன் இன்சுபெக்டர், கலிங்கன் லேன், காந்திநகர், முசிறி-621211), (10) சித்தரடியார் காவிரிக்கரை திருக்காவல் சேனுதிபதி M.R.சீனிவாசன் RMP, (90, தென்கள்ளர் தெரு, முசிறி-621211) முதலியோர்க்கு அனுப்பி (reply card) போட்டு உங்களது வருகைக்கு ஒப்புதல் பெற்றுச் சென்று அ.வி.தி. பணிபுரியுங்கள்.

**<u>சிறப்புக் குறிப்பு</u>:-** அருட்கணிப்பு, அருள்வாக்கு, அருள்நலம் வழங்கல், கருவறைகளையும் சுடுகாடு முதலான 9 வகைக் காடுகளையும் புத்துயிர்ப்புச் செய்தல், குருதேவரின் பட்டங்களைக் கூறி

'தலைத்தெழுங்கள்! அருளாட்சிக்கு உழைக்க வாருங்கள்! மந்திரவாதிகளை அடக்குங்கள்! மந்திரவாதிகள் செயல்படத் தடைவிதியுங்கள்!' என்று வேண்டுதல் ... முதலியன செய்யுங்கள்.

3. உங்களுக்கு பாதுகாப்பு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்வதின் மூலமே உருவாகும். சுடலைச் சன்னிதானம் பெரி.முத்தையாவின் விருப்பம் அறிந்து அவருடன் சுற்றுப்பயணம் செய்யலாம்.

<u>குறிப்பு</u>:-

**a)** முடிகயிறு, தாயத்து, அருளூறு பூசனைப் பொருள்கள் குருதேவரின் பெயரால் வழங்கப் பெறும் காணிக்கையில் நான்கில் ஒரு பங்கு உங்களுக்கு உரிமை.

**b)** சுற்றுப்பயணச் செலவுகளை அந்தந்த வட்டத்தார் அல்லது பரிகாரப் பூசைகளைப் பெறும் நோயாளிகளும், பேயாளிகளும் ஏற்பர்.

**- குருவாணை.**

**c)** உங்களுடைய ஊரில் யாகசாலை வைக்க முடியாததால் எங்கும் சென்று யாகசாலையில் பூசை செய்து உங்களுக்கு மருந்தாகவும், மக்களுக்கு விருந்தாகவும் அருளை விளைவித்திடுங்கள்.

4. தனிமனித நலம், குடும்ப நலம், சமுதாய நலம் முதலிய அனைத்தும் உங்களைப் போன்ற முழுநேர ஊழியர்களால்தான் விளைவிக்கப்படல் வேண்டும்.

<u>குறிப்பு</u>:- நீங்கள் ஆங்காங்கே சொற்பொழிவு, உரையாடல், விவாதம் மூலம் கொள்கை பரப்பும் பணியில் ஈடுபடல் வேண்டும். விரைவில் நமது இயக்கத்துக்கென கலை நிகழ்ச்சிகளும் தோற்றுவிக்கப்படும்.

(a) இதற்கான கலைஞர்களை உருவாக்குங்கள்;
(b) குருதேவர் அறிக்கை சந்தா சேருங்கள்;
(c) நமது புத்தகங்களை விற்க முற்படுங்கள்;
(d) அருட்கணிப்புக்காக ரூ.25/- பெற்றும், முழுமையான அருட்கணிப்புக்கு ரூ.48/- பெற்றும் அனுப்புங்கள்;

(e) பல புதிய அ.வி.தி. நிலையங்களை உருவாக்குங்கள்.

(f) குருதேவர் சுற்றுப்பயணத்துக்கு அழைக்கப்படக் கூடிய பெருமை நிலையை, உரிமை நிலையை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீருக்குள் இறங்கித்தான் நீச்சல் கற்றுக் கொள்ள முடியும். அதுபோல அ.வி.தி. சுற்றுப்பயணங்களில் ஈடுபட்டுத்தான் அருளாளராக முடியும். புரிந்து செயல்படுக.

5. நமது இயக்கத்தவருக்கும், ஆதரவாளர்களுக்கும் இதுவே குருவாணை. இந்த சுடாலின் சரோசினி குடும்பத்தாரை அவரவர் குடும்பத்துக்கு அழைத்து அ.வி.தி. பணி, இ.ம.இ. பணி ஆற்றுங்கள். அனைத்து வகையான மந்திரவாதிகளும் இவர்களைத் தாக்கித் தொடர்பு கொண்டிருப்பதால், அம் மந்திரவாதிகளை முறியடிக்க இவர்கள் குருதேவரின் அருவுருவ தொடர்பாளர்களாக செயல்பட குருவாணையும், அருளுலக ஒப்புதலும் வழங்கப்படுகிறது. புரிந்தும் புரியவைத்தும் செயல்படுக! - **குருவாணை.**

**குவலய குருகுல பீடம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**8.12.85.**

உடனடியாக இதன் நகலை அனைவருக்கும் அனுப்பிச் செயல்பட முற்படுக!

**- குருவாணை.**

**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல் : சித்தரடியார் திரு பா.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து என்ற சொல்லும், இந்துமதம் எனும் வாழ்வியல் முறையும் தமிழருடையவே!

பொன்னேரி,
4.10.85.

பேரன்பிற்கும் பேரார்வத்துக்கும் உரிய நண்பர் S.V.சுப்பிரமணியம் (C/O Nithya Textiles, 246, Main Road, Chinnamanur, 626515) அவர்களுக்கு குருதேவர், ஞானச்சாரியார், அருளாட்சி நாயகம், அரசயோகி, இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் பல்லவப் பெருமண்டலத்துத் துணைக் குருவாணை ஓலைநாயகம், தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப் பெருமான் சன்னிதானம், சித்தரடியார் ஏ.இரவியை (91, தபால் தெரு, கும்மிடிப்பூண்டி-601201) திருமந்திற ஓலைநாயகமாக வைத்து வரையும் மடல்.

1) தங்களின் 30.9.85 தேதியிட்ட அஞ்சல் தலைமைப் பொறுப்பாளர் பிறமாச்சாரியார் சி.கவிக்குமார் B.Sc., (56, N.G.O. காலனி, பொன்னேரி-601204) அவர்களுக்கு எழுதியதைக் கண்டோம். மகிழ்ச்சி, நன்றி, எமது உளம் நிறை வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

2) நண்ப! இந்துமதத்தில் எண்வகை ஆச்சாரியார்கள், பதின்மூன்று வகை குருவழி ஆச்சாரியார்கள், பதின்மூன்று வகை கருவழி ஆச்சாரியார்கள், 48 வகை பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 48 வகை அருளாளிகள், 48 வகை மருளாளிகள்,

48 வகை அருட்பட்டத்தார்கள், 48 வகைக் கருவறை மூலவர்கள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள், ... என்று நன்கு திட்டமிடப்பட்ட வழிகாட்டிகளும், வழித்துணைகளும் தோற்றுவிக்கப் பட்டுள்ளனர்.

இந்துமதம் இன்றிலிருந்து பார்த்தால் சுமார் 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக் கண்டத்தில் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது. (இந்து என்ற சொல் தூய உயர் தனிச் செந்தமிழ்ச் சொல்). இச்சொல்லுக்கு ஆதியில் 48 வகைச் சொற்களாகப் பொருள் கூறப்பட்டுள்ளது. காலப்போக்கில் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் காலத்துக்குள் இச் சொல்லுக்கு நூற்றுக்கணக்கான சொற்கள் பொருள் கூறுபவைகளாக அமைந்து விட்டன.

எனவே, **இந்து என்ற சொல்லும், இந்துமதம் என்ற வாழ்வியல் முறையும்** (The Induism is nothing but the Principle of Life. And it can be said that the Induism is a Social Science) **சமுதாய விஞ்ஞானமும் தமிழருடையவே! தமிழருடையவே! தமிழருடையவே!** என்ற பேருண்மையை உணர்ந்தும், உணர்த்தியும் செயல்படுவதைப் பொறுத்துத்தான் இந்துமத மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிச் செழுச்சியும், உரிமை மீட்சியும், பெருமைக் காப்பும் உருவாகிடும்! உருவாகிடும்! உருவாகிடும்!

3) நண்ப! அருளை அநுபவப் பொருளாக வழங்கி சித்தர் நெறிச் செல்வர்கள் அனைவரும் அருள் ஊற்றுக்களாக மாறிச் செயல்படும் ஏட்டறிவும், பட்டறிவும், பயிற்சியும், முயற்சியும் வழங்க நாடெங்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் அமைத்துச் செயல்படுகிறோம் யாம். அதாவது, சித்தர்களைத் தவிர

மற்றவர்களால் தம்மிடம் வருகிறவர்களைத் தம்முடைய பதிலிகளாக, அருள் ஊற்றுக்களாக உருவாக்க முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. இதிலும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தாம் **“வாருங்கள் மானிடரே! உங்களைக் கடவுளாக்குகிறோம்”** என்று கூறி இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்குகிறார்கள்.

4) மற்ற செயல்நிலை விளக்கங்களுக்கு மதுரை மாவட்டம் மேலூர் கொட்டாம்பட்டி அருகில் உள்ள எமது குருகுலத்துக்கு செல்க. எமது தலைமைச் செயலாளரையும், மற்ற செயல் வீரர்களையும் காண்க. (அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், நெ.சேவுகன், C/O காதி வசுத்திராலயா G.R.N.S., கொட்டாம்பட்டி, மேலூர் தாலுகா, மதுரை-625103.)

5) அன்புகூர்ந்து எமக்கு நேரடியாக ரூ.50/- அனுப்பினால் அச்சிட்ட புத்தகங்களும், மற்ற அறிக்கைகளும் அனுப்புவோம். ரூ.20/- அனுப்பினால் சென்ற ஆண்டு குருதேவர் அறிக்கைகள் அனுப்பப்படும். ரூ.15/- கட்டினால் இந்த ஆண்டு ‘குருதேவர்’ அறிக்கையின் சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். ரூ.20/- + ரூ.15/- = ரூ.35/- அனுப்பினால் அனைத்துக் ‘குருதேவர்’ அறிக்கைகளும் அனுப்பப்படும். உடன் விரிவான பதில் தேவை.

**அன்பு**
**ஏ.இரவி,**
**4.10.85.**

நகல் எடுத்தவர்: அன்பு சித்தர் மகள் சாரதா சேகர்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியாள் திருமதி சாரதா சேகர் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# திருவோலை

To
V.Sundararaman B.E.,
C/O, Sree Krishna Boarding House,
56, Hindu Colony, D.V.Pradhan Road,
DADAR, Bombay, Pin: 400014.

அன்பு மகன் சுந்தரராமனுக்கு ஞானத் தந்தை குவலய குருபீடம், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் எழுதும் திருவோலை.

1. ஏற்புச் செல்வனே! அருளுலகம் எப்போதுமே சோதனைகளை வழங்கித்தான் சாதனையை நல்கும். உன்னைப் பொறுத்தவரை சோதனைகள் சற்று அதிகம்தான். இதற்கேற்ப உன் சாதனைகளும் அதிகமாக இருக்கும். கவலைப்படாதே!

2. புத்தரும் மகாவீரரும் குருவருளின்றி அலைந்தனர்; ஆனால், உனக்கந்த நிலை இல்லை. உறுதியாக வெற்றியுண்டு. உன் மனம்போல், ஒரு வாரம் இங்கு வந்து என்னோடு தங்கியிருந்து மேலும் அருளுலக அநுபவங்களைப் பெற்றுச் செல்லலாம்.

**குறிப்பு:** எமது சுற்றுப் பயணத் திட்டங்களைத் தெரிந்து முன்னனுமதி பெற்று இங்கு வருக!

3. தம்பிகளுக்கு நீயனுப்பியவை சரியே. ஆனால், கீழே வட்டவடிவ வளைவு நீச்சல் உடை போலுள்ளது. GEESON Maximum Size 10 இதில் கால், இடுப்பு, துணி முழுதுமே Elastic Fiber போல் அடுக்கடுக்காக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பயனில்லை. முடிந்தால் 12 வயதுக்குரிய Pant (சேட்டு வீட்டுக் குழந்தைகளுக்கு

வாங்குவது போல்) உன்னைவிடக் குண்டாக உள்ள பையன்களுக்கு என்று வாங்குக.

சூரி - பாடி 38, நீளம் 27, பனியன் Stretch
இடுப்பு 36, உயரம் 30, புல்பேண்ட்
இடுப்பு 36, உயரம் 131/2, அரைக்கால் சட்டை
செந்தில் - பாடி 36, நீளம் 28, பனியன் Stretch
இடுப்பு 33", உயரம் 15", அரைக்கால் சட்டை
இடுப்பு 33", உயரம் 34", புல்பேண்ட்

4. உன்னுடைய 11.11.85ஆம் நாளைய அஞ்சலட்டையும் கிடைத்தது. நமது இயக்கத்துக்கோ, குருதேவருக்கோ உதவ வேண்டும் என்பதற்காக அதிகம் சிரமப் படாதே. தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் அனைத்தும் உனைத் தேடி வந்தடையும்! வாழ்க! வளர்க! வளம் பெறுக! வெற்றி பெறுக!

5. எமது I.O.B. Perambur SB A/C No. 23429, P.Krishnamurthy M.A., H/O Dr A.K. Rathna, ESI Sembium, Madras - என்ற Bank முகவரிக்கே M.T. மூலம் பணம் அனுப்பலாம். மணியார்டர் அல்லது டிராப்ட்டு மூலமும் அனுப்பலாம்.

6. தமிழகத்துக்குள் மேடைப்பேச்சில் இ.ம.இ. வளர ஆரம்பித்து விட்டது. 22.11.85 இரவு பாண்டியனில் புறப்பட்டு மதுரை, தேனி, சின்னமனூர், கம்பம் அ.வி.தி. பயணம். 26.11.85 பகல் 2.30 மதுரையிலிருந்து பல்லவன் Express Trainஇல் சென்னை திரும்ப உள்ளோம். இது போன்ற சுற்றுப் பயணங்களில் நீயும் கலந்து கொள்ளுவது இனிமையாகவும் தெம்பாகவும் பயனுகவும் இருக்கும்.

7. நாம், அனைத்தையும் தொடர்ந்து அச்சிட்டு நூல்களாக, அறிக்கைகளாக வழங்குகிறோம். சொற்பொழிவுகளாகவும் விளக்குகிறோம். இன்னும் சில முழு நேர ஊழியர்கள் தேவை; அல்லது பணம் தேவை. விரைவில் இவை கிடைக்க முயற்சிக்கிறோம்.

8. சண்முகானந்தன் மூலம் S.Mohan B.Sc., B.Tech., 29, SAHID NAGAR, BHUBANESWAR - 751009 என்பவன் சித்தரடியானுகிக் கபாலீசுவரி சன்னிதானம் பெற்றுள்ளான். முடிந்தால், இவனைச் சந்தித்துக் கொள்கை விளக்கம், குறிக்கோள் நோக்கம் வழங்குக. இவன் முழுநேர ஊழியனுக வடநாடு சுற்றும் பேராற்றல் மிக்க சித்தர் மகன் - இவன் சண்முகானந்தனின் சாதனையே - ஒவ்வொருவரும் இப்படிச் சிலரை உருவாக்க முயல வேண்டும். எம் கைப்பட எழுதி அருளூறு பூசனைப் பொருளும் அனுப்புகிறேம்.

**அன்பு**

**ஞானத்தந்தை,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**
15/11/85.

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: குருதேவரின் கையெழுத்தில் இருந்ததைப் பார்த்து சித்தரடியான் சுந்தரராமன் எடுத்து வைத்திருந்த கையெழுத்து நகலாக இருந்தது.//**

ஓம்

சென்னை-11,
26/8/85.

# <u>தனிமனித விமர்சனச் செயல்திட்ட முடங்கல்</u>

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், பரமாச்சாரியார் அவர்களுக்கு,

(1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

(2) இந்துமதத் தந்தை, ஞானச்சாரியார், தலைவர், குருதேவர், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, <u>ஞாலகுரு சித்தர் கருவூரார்</u> அவர்கள் தாம் கூற விரும்புகிறவைகளையும், செய்ய விரும்புகிறவைகளையும் பதினெண்சித்தர்களின் இந்துமத மரபுப்படி கருவழி வாரிசுகளையும், குருவழி வாரிசுகளையும், தோழர்களையும், நண்பர்களையும், ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும், பத்தர்களையும், உரிமைச் சுற்றங்களையும் பயன்படுத்தியே உலகுக்கு வழங்குகிறார் என்ற பேருண்மையினை நம்மவர்கள் புரிந்து கொண்டேயாக வேண்டும். **குருவாணை**.

(3) யாம் மனித நடமாட்டமேயில்லாத மலைகளிலும், பாறைகளிலும், கடல்வெளிகளிலும், காடுகளிலும் பெரும்பகுதி வாழ்வைக் கழித்திட்டதால் காணுகின்றவர்களிடம் எல்லாம் அளப்பரிய பற்றோடும், பாசத்தோடும், மதிப்போடும், மரியாதையோடும் பழகி அருட்கொடை வழங்கிச் செயல்படுகிறோம். மேலும் கலியுகத்தில் 10வது, 11வது பதினெண்சித்தர்

பீடாதிபதிகள் இந்துமத வீழ்ச்சிகளையும், தமிழ்மொழித் தாழ்ச்சிகளையும், அருளுலக மோசடிகளையும், பிற மதக் குறைகளையும் விரைந்து அகற்றும் பணியில் நிறைவு பெற முடியாமல் போய்விட்டதால்; எப்படியாவது யாமாவது நிறைவு பெற வேண்டும் என்ற பேராசையால் எம்மிடம் வருபவர்களின் எந்தத் தகுதியையும் ஆராயாமல் அனைவரையும் அப்படியே ஏற்று அருளாளர்களாக்கி வருகிறோம் யாம். இன்னும் சொல்லப் போனால் அனைவரையுமே எமது வாரிசுகளாக ஆக்கும் பணியையே செய்கிறோம்.

ஆனால், தமிழினத்திற்கே உரிய சாபக்கேட்டின்படி ஏறத்தாழ பெரும்பாலானவர்கள் தன்னல வெறியர்களாகவும், அடங்காப் பிடாரிகளாகவும், அகம்பாவக் காரர்களாகவும், ஆணவக் காரர்களாகவும், பகை மனமும், பழி வாங்கும் வெறிச் சிந்தையும் உடையவர்களாகவும், குருவையும், குருவாணைகளையும், குருவாணை பெற்றவர்களையும் மறந்து, துறந்து, மறுத்து, வெறுத்து, பதுக்கி, ஒதுக்கியும் செயல்படுபவர்களாகி விட்டார்கள். இந்த கலக்க குழப்ப தேக்க முடக்க அடக்க ஒடுக்க மந்த நிலைகளை இனியும் அனுமதிக்க இயலாது.

எனவே, சுய விமர்சனம் என்ற தத்துவப்படி குறிப்பிட்ட சிலரையாவது கடுமையாக விமர்சிக்க நேரிட்டிருக்கிறது. இதனைப் புரிந்தும், விரும்பியும், நம்பியும், ஏற்றுச் செயலாக்கக் கூடிய பக்குவ நிலைகளையும், சூழ்நிலைகளையும்; எம்மால் இட்டும் தொட்டும் சுட்டியும் முழுமையாக உருவாக்கப் பட்ட சிலருள் ஒருவராயும், இந்த உக பதினெண்சித்தர் பீடாதிபதியின் திருமந்திற ஓலைநாயகமாகவும், பரமாச்சாரியாராகவும் விளங்கும் அருட்செல்வராகிய நெ.சேவுகனாகிய தாங்கள்தான் உருவாக்க வேண்டும். எனவே துணிவோடும், கனிவோடும், பணிவோடும் எமது

கருத்துக்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நபர்களைத் திருத்த முயலுங்கள். அவர்கள் திருந்தா விட்டால் வருந்த வேண்டாம். .....

(4) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

(5) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

(6) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

(7) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

இது தொடரும்......

ஓம் திருச்சிற்றம்பலம்!

**அன்பு**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூறார்,**
**26/8/85.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல். நகலின் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

# "அருள்நிலையோடு அறிவு விழித்த நிலையில் செயல்பட வேண்டும்!"

பொன்னேரி,
4/11/85.

பேரன்புமிக்க இனிய பரமாச்சாரியார் அவர்களுக்கு!

கவிக்குமார் பணிவுடன் வரையும் மடல்.

(1) நலம்! நலமறிய ஆவல்.

(2) தங்களின் D.R.R.No.:-1109/1/11/85 மற்றும் 1110/2/11/85 மடல்கள் கிடைத்தன. மகிழ்ச்சி! ஆனால், அதற்குரிய பதிலைத்தான் மகிழ்ச்சியோடு தர இயலவில்லை. ஏனெனில், குருதேவரிடம் கல்லூரியிலேயே காட்டி பதிலும் பெற்று இம்மடலில் வரைகின்றேன்.

(3)

(a) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

(b) "கயவன் ஒருவன் குருகுலத்திலேயே வந்து ஏமாற்றி விட்டான்..." என்று பலவாறு கூறி எழுதியுள்ளீர்கள். இதற்கு நானே நேரிலே! ஏன் ஏமாற்றினான் என்று நினைக்கின்றீர்கள்; ஏமாந்து விட்டோம், படிப்பினை என்று ஏன் ஏற்கக் கூடாது! என்று கூறினேன். இருந்தும் தாங்கள் வருத்தமடைவது கண்டு குருதேவர் மிகவும் சினம் கொண்டார்.

"..... தங்களிடத்திலே, உங்கள் பணமோ, இயக்கத்தின் பணமோ, நன்கொடையோ மிதமிஞ்சிப் போய்விட்ட காரணத்தினால்தான் புதிதாக வந்த ஒருவன் கேட்டவுடன் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டீர்கள். இதே கைக்கும் வாய்க்கும் சரியாக இருக்குமென்றால் இவ்வாறு செய்வீர்களா? ஆரம்பத்திலேயிருந்து சொல்லி வருகின்றேன்; 'யாருக்கும் சாப்பாடு போட்டு நொடித்துப் போகாதே! உனது கையை விட்டுப் பணம் கொடுக்காதே! உன்னை எவனாவது கூப்பிட்டான் என்றால் போக்குவரத்துச் செலவுக்குப் பணம் கேள்; இல்லையெனில் தயை தாட்சணியமின்றி மறுத்து விடு. இது ஒரு புரட்சி இயக்கம்; போர்க்களத்திலே ஒப்பாரிக்கு இடமில்லை. ஏழை, பணக்காரன் என்று நோய்கள் பார்ப்பதில்லை. *செல்லும்போது அழைத்துச் சென்றான்; திரும்பும் போது எனது பணம் செலவழித்து வந்தேன் [என்று கூறுவது!].* செல்லுமிடத்தில் உணவுக்கு என்ன செய்துள்ளார்கள்? என்று கேட்டு ஏற்பாடு செய்து விட்டுச் செல்ல வேண்டும். இல்லையெனில், செல்லும் போதே உணவினை எடுத்துச் செல்ல வேண்டும். இது ஒரு புரட்சி இயக்கம். எப்போதும் விழிப்போடும், கவனிப்போடும் செயல்பட வேண்டும்.' பலமுறை கூறியுள்ளேன்.

"அருள்நிலைகள் மட்டும் புரட்சி இயக்கத்திற்குப் பயன்படாது. அறிவு நிலைகள் வேண்டும். உலகியல் புரிய வேண்டும். முன்பின் தெரியாத ஒருவன் அதுவும் ரூ.3000/-க்கான இரசீதைக் கொண்டு வந்து காட்டி (அதுவும் இந்த உலகில்) ரூ.30/- கேட்டான் என்றால் எடுத்துக் கொடுத்து விட்டேன் என்று கூறுவது? எப்படிப் பொருந்தும்? ஏமாந்ததற்கு தாங்கள்தான் காரணமே தவிர; ஏமாற்றியவனோ, கடவுள்களோ, தெய்வீகமோ அல்ல. நானே, அருள்நிலையோடு அறிவு விழித்த நிலையில் செயல்படுகின்றேன்.

"இந்தச் சேவுகன் இப்படித்தான் அடிக்கடி தப்புப் பண்ணுகின்றான். இவனது பரந்த வெள்ளையுள்ளத்தால் இவனைப் புரியாதவர்களால்

இவனுக்குத் தொல்லை ஏற்பட்டு விடுகின்றது. இவனும் மற்றையோர்களின் தவறுதலுக்கும், நலிவுகளுக்கும் காப்பாளனாக, பொறுப்பாளனாக இருந்து விடுகின்றான். முதலில் இவன் திருந்த வேண்டும். இதேபோல், இவன் செயல்பட்டால் நானே பலவாறு கண்டித்துக் கடிதம் எழுத நேரிட்டு விடும். இரவீந்திரன், சுடாலின் ... போன்றோர் விவகாரங்களில் இப்படித்தான் செயல்படுகின்றான், செயல்பட்டான். எனவே, எனது நேரடியான கண்டிப்பும், குருவாணையும் வருவதற்கு முன்னால் உண்மைகளை உணர்ந்து செயல்பட வேண்டும்.....” என குருதேவர் கூறினார்.

(4) ‘சூலம் பிடுங்கியவனுக்கும், குருகுலத்தில் ஏமாற்றியவனுக்கும் தண்டனை வேண்டும். தொட்டாலே *சாக்* அடிக்க வேண்டும்’ - எத்தனையோ சோதனைகளைக் கண்டு துவளாது சாதனைகள் கண்டு வருகின்றவர்கள் தாங்கள். இதையும் ஒரு சோதனையாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்காக தண்டிப்போ, பாதிப்போ தரத் தேவையில்லை. ‘அரசன் அன்று கொல்லுவான்; தெய்வம் நின்று கொல்லும்’ என்பதையே இங்கு கூற விரும்புகின்றேன்.

நாம், பண்பட்ட இயக்கத்தை, தெய்வீக நிலைகளை ஏற்படுத்தி வருகின்றோம். ரௌடிகளைப் போன்று செயல்படவில்லை. தாங்கள் நினைப்பது போல் நம்மை ஏமாற்றியவனுக்கு உடனே தண்டனை வழங்க வேண்டுமென்று நினைப்பது; மந்திரவாதி தம்மை தாக்க நினைத்தவனை உடனே அழிக்க நினைப்பதற்கு ஒப்பாகும். அவன்தான் பேய் பிசாசுகளை வைத்துக் கெடுதல்கள் செய்ய முயலுவான். நாம் தத்துவத்தைச் சொல்ல வந்திருக்கின்றோம். பண்பட்ட சமுதாய வழிமுறைகளை ஆடுமாடுகள் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதக் கூட்டத்திற்கு விளக்க வந்திருக்கின்றோம்.

எந்தக் கோயிலில் உள்ள ஆண்டவனும் தம்மிடம் தவறாக நடந்து கொண்டவனைத் தண்டித்ததே இல்லை. முனிகள், பேய்கள்,

பிசாசுகள், ... போன்ற சிறு தெய்வங்கள்தான் உடனே தண்டிக்கும் மனப்பக்குவம் கொண்டவை. எனவேதான், அவ்வகைப் பட்டவர்களை ஊர்களில் வெளிப்புறத்தே மரத்தடியில் ஒதுக்குப்புறமாக ஒதுக்கி வைத்துள்ளார்கள். அவர்கள் ரௌடிகள் போல, நாம் ரௌடியிசம் நடத்தவில்லை.

தவறு செய்பவன் தண்டனை அடைய வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. நாமே உடனே வழங்க வேண்டும் என்று நினைப்பது தவறு! தெய்வங்களிடம் நீதிக்கு விட்டு விட்டோம். அவர்கள் தவறு என்றால் தண்டனை நிறைவேற்றுவார்கள். நிச்சயம் தண்டனை கிடைத்தே தீரும்.

நாம் சிறுசிறு வழிபடுநிலையினரைக் கூட நமது குருகுலத்திலே பீடம் கட்டி, அவர்களைப் பக்குவப்படுத்தி, பண்பட வைத்து, பண்பாட்டுப் புரட்சிக்கு, விடுதலைப் புரட்சிக்கு, உரிமைப் புரட்சிக்கு, இலக்கியப் புரட்சிக்கு, வரலாற்றுப் புரட்சிக்கு ... பங்கு பெற அழைப்பு விடுக்கின்றோம். அவ்வாறு இருக்கையில்; துவக்கப் பள்ளி ஆசிரியர் போன்றே "தவறு செய்கின்ற மாணவனுக்கு உடனே தண்டனையாக இரண்டு அடியோ, வெயிலில் நிற்க வைப்பதோ போல தண்டனை வேண்டும்" என்று நினைப்பது தவறு! -

நாம், நமது கடமைகளைச் செய்வோம்; நம்மால் முடிந்தவற்றைச் செய்து கொண்டே செல்வோம். நம்மை இகழ்வாக நினைப்பதும், இழிவாக நினைப்பதும் புதியதோ புதுமையோ அல்ல! இது முதல் தடவையும் அல்ல! நம்மை வழிநடத்திச் செல்பவர்களின் பின்னே நாம் பயணத்தைத் துவக்கி விட்டோம். இதில் பாதையில் நின்று கேலி செய்பவனைக் கண்டு மயங்கினால் தயங்கினால் நமது இலட்சியம் நிறைவேறாது! இந்தக் கண்டிப்புக்கும், தண்டிப்புக்கும் உரிய முயற்சிகளுக்கே நமது நேரத்தைச் செலவழிக்க நேரிடும். நாம்

நடத்துவது காவல் துறையல்ல; நீதிமன்றம். அனைவருக்கும் நீதி கிடைக்கும் உண்மையை மக்கள் உணர்வார்கள். அஞ்ச வேண்டாம்.

(5) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

(6) *[இந்தப் பத்தி அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளது.]*

**குறிப்பு**:- ..... ..... ..... ..... ..... குருதேவர் ஒப்புதலுடன் இம்மடல் வரையப்பட்டுள்ளது.

(ஒப்பம்) அன்பு

**சி.கவிக்குமார்.**

நகல் எழுதியது:-

அன்பு
தலைமைப் பணியாளர்,
சித்தர் மகன், சித்தரடியார், சித்தர் பதிலி,
சோ.இரவீந்திரன்,
19/11/1985.

**//உண்மை நகல்//**

**//மூலம்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# நிர்வாகக் குழுவின் செயல்நிலை மேம்பாட்டுப் பரிந்துரைகள்

**அனைவரின் கருத்துக்களும் வேண்டடப்படுகின்றன.**

1) கி.பி.1772இல் சித்தர் கருவூரார் வழிவந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் கீழ் இன்று உருவாக்கப்பட்டுள்ள கிளை அமைப்புக்களும் மிகத் தெளிவான விளக்கங்களோடு வளர்ச்சி பெறுவதற்கு உதவி செய்யும் அனைவருக்கும் வாழ்த்தையும் போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

2) நம்மவர்கள் பேரார்வத்தோடு பெருமுயற்சிகள் செய்து குருதேவரின் சுற்றுப் பயணங்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் ஏற்பாடுகள் செய்தமைக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.

3) மற்றக் கட்சிகளையும், கழகங்களையும், ... போன்றதல்ல நமது இயக்கம். இதில் கட்டுப்பாடும், நெறிமுறையும், நிர்வாக ஒழுங்கும் நிறையக் கடைப்பிடிக்கப்பட்டேயாக வேண்டும். **இல்லாவிட்டால் அருட்கலைகளைப் பயன்படுத்தித் தங்கள் தங்களின் எல்லைக்கேற்பப் பல தனிக்குழுக்கள் வளர்வது நிகழ்ந்து விடும்.** **எச்சரிக்கை!** குருதேவர் அறிவித்திட்ட அ.வி.தி. கிளை அலுவலகங்கள், மாவட்ட வட்ட அமைப்பாளர்கள், மாவட்ட வட்டக் கொள்கைப்பரப்புச் செயலாளர்கள்,

அ.வி.தி. நிலையத்தார்கள், அ.வி.தி. செயல்வீரர்கள், கையெழுத்துப் பிரதி நூலகத்தார்கள், ... என்றுள்ள பல்வேறு நிலையினர்களின் பொறுப்பு, கடமை, அதிகார எல்லைகள், செயல்நிலைத் தகுதிகள், ... முதலியவைகளை எல்லோருமே புரிந்து செயல்பட்டாக வேண்டும். அப்பொழுதுதான் ஒருவரையொருவர் மதிப்பதும், நட்புச் செய்வதும், விரும்புவதும், ... தொடர்ந்து பசுமையாக இருந்திடும்.

4) நாம் நொடிக்கு நொடி வளர்ந்து வருகிறோம். பல புதியவர்கள் வந்த வண்ணமாகவே இருக்கிறார்கள். இதனால் பழையவர்கள் பொறுப்போடும், ஒற்றுமையோடும், கட்டுப்பாட்டோடும் தலைவர்களை மதித்தும், முறையான ஒப்புதல்களை ஆரம்பம் முதல் இறுதி வரை பெற்றே செயல்படும் மனநிலையைப் பெற்றுமே செயல்படல் வேண்டும். தேவையில்லாத அவசர அவசியங்களோ, போட்டி பொறாமைகளோ, வீம்புகளோ, ஆணவப் போக்குகளோ, பிறரை மதியாத செயல்களோ, வேற்றுமை பாராட்டலோ, அவமதித்தலோ நம்மிடையே ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:-** இதற்காகவே வட்ட, வட்டார, மாவட்டப் பதவிகளிலும், அ.வி.தி. நிலையப் பொறுப்பிலும், அ.வி.தி. பணியிலும் உள்ளவர்கள் கட்டாயமாக வாரம் ஒருமுறையாவது நேரடியாக குருதேவருக்கு அஞ்சல் எழுதிட வேண்டும். அப்பொழுதுதான் குருதேவரிடமிருந்து அருளை அநுபவப் பொருளாகத் தொடர்ந்து பெற்றுக் கொண்டே இருக்க முடியும். இதன்மூலம் அனைத்து விதமான பாதுகாப்புக்களும், அருளூறு நிலைகளும் கிடைக்கும்.

அவற்றுடன் இயக்கச் செயல்நிலைகள், தனிமனிதச் சாதனைகள், சுற்றுப்பயண விவரங்கள், முழுநேர ஊழியர்களின் நிலைகள், ... முதலியவை தலைமைச் செயலாளர் வீரமாகாளி சன்னிதானம்

நெ.சேவுகனுக்கும், தலைமைப் பொறுப்பாளர் அங்காள பரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமாருக்கும், தலைமைப்பீடம் ஞாலகுரு சித்தர் கருவூருருக்கும் நன்கு தெளிவாகப் புரிந்திடும்.

5) இன்று வரை நமது தாய்நாட்டில் தோன்றியுள்ள தலைவர்களோ, இயக்கங்களோ, கழகங்களோ, சங்கங்களோ, சபைகளோ, மன்றங்களோ ... மக்களைப் பெரிய அளவில் ஒன்று திரட்டி, ஒற்றுமைப் படுத்தித் தோழமையையோ! நட்பையோ! சமத்துவத்தையோ! கூட்டு வாழ்வையோ! பொதுவுடமைப் போக்கையோ வளர்த்திட வில்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! அதாவது, அனைத்துத் தலைவர்களும், நிறுவனங்களும் தங்கள் தங்களின் வளர்ச்சிக்காகச் சாதிமத வட்டார வெறிகளையும், போட்டி பொறாமைகளையும், சண்டை சச்சரவுகளையும், பிரிவினைகளையும், வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும், வேற்றுமைகளையும் வளர்த்தே வந்திருக்கிறார்கள்.

அதாவது இவர்கள் குடிதண்ணீர்க்குள் மாசு இருந்தாலும்; அதைக் கலக்கிக் குழப்பி மீன் பிடிப்பது போலவே; நம் தலைவர்கள் சமுதாய அமைதி, நிம்மதி, நிறைவு, ஒற்றுமை, சமாதானம், நல்லுறவு, நட்பு, தோழமை, அன்பூறு அரவணைப்பு, சமத்துவப் பண்பு, பொதுவுடமை நோக்கு, ... முதலிய அனைத்தையும் சிதைத்துச் சீரழித்துத் தங்களுக்குச் செல்வாக்கையும், செல்வத்தையும், பதவியையும், அதிகாரத்தையும் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்திட்டார்கள், வாழ்ந்திடுகிறார்கள், (வாழ முயற்சிக்கிறார்கள்).

**எனவேதான், நமது இயக்கம் இன்றைய தலைவர்களையும், நிறுவனங்களையும், நிர்வாகங்களையும், ... நேரடியாகத் துணிந்து விமர்சிக்க வேண்டியிருக்கின்றது. அதனால், நமக்கு அனைவரிடமிருந்தும் எதிர்ப்பு, மறுப்பு, வெறுப்பு, பகை, ... ஏற்பட்டுக் கொண்டே**

**இருக்கும். அவற்றைச் சமாளிக்க நம்மவர்களுக்கிடையே பற்றும், பாசமும், ஒற்றுமையும், நட்பும், தோழமையும், உறவுப்பண்பும், வலிமைமிக்க வளத்தோடு செழித்திட வேண்டும்.** இதனைப் புரிந்தும் புரியவைத்தும் நம்மவர்கள் அடிக்கடி சந்தித்துச் சிந்தித்து நெருங்கிப் பழகிச் செயல்பட வேண்டும்.

6) **நாம் ஓர் அருளாளர் திருக்கூட்டமாக உள்ளோம் என்பதால்; நாம் அடிக்கடி கூட்டு வழிபாடு, பூசை, தவம், சுடுகாட்டுப் புத்துயிர்ப்பு, அ.வி.தி. பரிகார யாகம், பருவபூசை, அமாவாசை வேள்வி, ... முதலியவைகளில் விருப்பத்தோடு கூடிப் பழகிடல் வேண்டும். அதன்மூலம் நம்மவர்கள் அருளுலகத்தாரின் உதவிகளையும், பொருளுலகத்தாரின் உதவிகளையும் பெரிய அளவில் பெற்றுப் பகிர்ந்து கூட்டுடமை வாழ்வுக்கும், சமத்துவ வாழ்வுக்கும், சகோதரத் தத்துவ வாழ்வுக்கும் சிறந்த பேரிலக்கியங்களாகத் திகழ்ந்திடும் நிலை கிடைத்திடும்.**

குறிப்பு:- பதினெண்சித்தர் பீடாதிபதிகள் காலத்தில்தான் குருவருளால் அருளாளர்கள் உருவாக்கப்படுவார்கள். மனிதன் தன் விருப்பத்துக்கும், முயற்சிக்கும் ஏற்ப எத்தகைய உயரிய, அரிய, பெரிய வழிபடு நிலையையும் பெறக் கூடிய வாய்ப்பும், வசதியும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் காலத்தில்தான் கிடைக்கும். இன்னும் சொல்லப்போனால் பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் உலகமெங்கும் தேடித் தக்க மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அருளுலக வித்துக்களாகவும், நாற்றங்கால் பயிர்களாகவும், விதைப் பண்ணைகளாகவும் ... தயாரிக்கிறார்கள். எனவே, இன்றைய உலகில் வாழுபவர்கள் நேரடியாகவே பதினெண்சித்தர் பீடாதிபதியிடம் அருளுலகப் பயிற்சிகளைப் பெறும் பொன்னான வாய்ப்பு உருவாகியிருப்பதை நம்மவர்கள்தான் அனைவர்க்கும் அறிவிக்க வேண்டும்.

7) நம்மவர்கள் குருதேவரை எந்த வட்டாரத்துக்கு வரவழைப்பதென்றாலும் அதுபற்றிய முழு விவரங்களை உடனே தலைமைச் செயலாளர் நெ.சேவுகன், தலைமைப் பொறுப்பாளர் சி.கவிக்குமார், தலைமைப்பீடம் குருதேவர் ஆகிய மூவருக்கும் அறிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் குருகுலத்தில் அருளூறு பூசைகளும், தலைமைப் பொறுப்பகத்தில் பொருளுலக ஏற்பாடுகளும், தலைமைப் பீடத்தில் அருளூறு பூசனைப் பொருட்களின் தயாரிப்பும் நிகழ்ந்திடும். இவை குறைந்தது 15 நாட்களுக்கு முன்பே துவக்கப்படல் வேண்டும்.

எனவே, சுற்றுப்பயணத்தை உறுதி செய்து பயணச் செலவுக்குரிய பணத்தை 15 நாட்களுக்கு முன்பே தலைமைப் பீடத்துக்கு அனுப்ப வேண்டும். (Returning Tickets) சென்னை திரும்புவதற்கு பயணச் சீட்டு புகைவண்டிப் பயணத்துக்குக் கட்டாயமாக அந்தந்த வட்டாரத்திலிருந்தே பதிவு செய்யப்படல் வேண்டும். அதாவது, குருதேவரின் சுற்றுப்பயணம் கூடுமானவரை இருப்புப் பாதை வண்டிகளிலேயே நிகழ்த்தப்படல் வேண்டும். அதுதான் குருதேவரின் நலத்துக்கும், அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புக்கும் சிறப்பாக இருக்கும். எனவே, இதனைப் புரிந்து அனைவரும் செயல்படல் வேண்டும்.

**<u>குறிப்பு</u>:-** 21.12.85, 22.12.85 இருநாள் முசிறி சுற்றுப்பயணத்துக்குரிய பணம் இன்று 21.12.85 சனிக்கிழமை காலை வரை வரவில்லை. ஆனால், இரண்டு தந்திகள் அடித்துக் குருதேவரை முசிறி வரச் சொல்லி வேண்டுகோள் விடுத்தார்கள். இது எப்படி முடியும்? முசிறி க.ப.செல்வமோ குறைந்தது 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பாவது ரூ.300/- அல்லது ரூ.400/- பணம் அனுப்பிப் போக வர இருப்புப்பாதை வண்டிப் பயண (டிக்கட்) சீட்டுப் பதிவு செய்யுமாறு (Reservation)

சொல்லியிருக்க வேண்டும். எனவே, இவர்களின் தவறுகளால்தான் குருதேவர் முசிறி செல்லவில்லை.

<u>**சிறப்புக் குறிப்பு**</u>:- வீ.மா.ச.வுக்கும் உரிய காலத்தில் முசிறிப் பயணம் அறிவிக்கப்படாததால்; குருதேவரின் வேள்விக் குண்டத்தில் பாதுகாப்புப் பூசைகள் நடைபெறவில்லை. வருந்தத் தக்கது. திருந்தத் தக்கது.

8) **கோயில் கருவறைத் தெய்வங்களைக் காண வரும் வாய்ப்பு இல்லாதவர்களுக்காகத்தான் எழுந்தருளி சிலை வீதிவலமாக உலா வரும் திருவிழா கொண்டாடப்படுகிறது. இதைப் போலத்தான் அருளுலகப் பேருண்மைகளை அனைவரும் தெரிய, அறிய, ஆராய, புரிய, உணர, ... இயலாது என்பதால்தான் குவலய குருபீடம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் ஊர் ஊராக வந்து ஞானம் வழங்குகிறார்.**

எனவே, இவருடைய வருகை பற்றி நல்ல முழுமையான அறிவிப்புக்கள் எங்கும் வழங்கப்படல் வேண்டும். இவர் 48 வகை வழிபாட்டு நிலையங்களிலும். உள்ளூர்ச் சுடுகாடு புதைகாடு சமாதுகள் நீர்த்துறைகள் ... முதலிய இடங்களில் பூசை செய்து அருளாட்சிக்காக அந்தந்த வட்டார அருளுலகத்தார்களை விழிச்சி நிலை, எழிச்சி நிலை, செழிச்சி நிலை, தழைத்தெழு நிலை, உழைப்பு நிலை, ... முதலியவை பெறுமாறு செய்வதற்குரிய வசதி வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

9) நாடெங்கும் பல வட்டாரங்களில் அ.வி.தி. நிலையங்கள் உருவாக்கப்படல் வேண்டும். குக்கிராமம் முதல் பெரிய பெரிய நகரங்கள், ஊர்கள் வரை மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி கருவறைப் புத்துயிர்ப்புப் பணி பெரிய அளவில் செயலாக்கப்படல் வேண்டும்.

அப்பொழுதுதான் நம்மவர்களுக்கு அருளுலகப் பாதுகாப்புக்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். அத்துடன் நமது அ.வி.தி. பணிக்குத் தேவையான அருட்சத்திகளை அந்தந்த வட்டாரங்களிலேயே கிடைக்குமாறு செய்ய முடியும்.

<u>நகல் தயாரித்தவர்</u>:

அன்பு
M.R.சீனிவாசன் RMP,
90,தென்கள்ளர் தெரு,
முசிறி, திருச்சி மாவட்டம்,
7-1-1986.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# ஒளி வணக்கமே இந்துமதம்

சுடர் வழிபாடே இந்துமதம்.

விளக்கைப் பூசை செய்வதே இந்துமதம்.

சோதியைக் கும்பிடலே இந்துமதம்.

தீயைப் போற்றலே இந்துமதம்.

அருட்சுடரால் அக இருளகற்றலே இந்துமதம்.

பல்வேறு வகையான விளக்குகளைப் பயன்படுத்திப் பூசை செய்யும் தத்துவச் சிறப்புடையதே இந்துமதம்.

தீபாவளி, கார்த்திகைத் தீபம், ஏமசோதி, காமசோதி, சோமசோதி, வாமசோதி, ... முதலியன உணர்ந்து வழிபட்டுப் போற்றலே இந்துமதம்.

ஒளியால் மனிதனைப் படிப்படியாக ஒளியேற்றி நாற்பத்தெட்டு நிலைகளைப் பெறச் செய்வதே இந்துமதம். அதாவது, மனிதனைக் கடவுளாக்குவதே இந்துமதம். கடவுளென்று ஒரு முதலாளியைக் கற்பிக்காத மதமே இந்துமதம்.

**குவலய குருபீடம்,**
**குருமகாசன்னிதானம், ஞானகுரு சித்தர் கருவூரூர்,**
6-2-86.

//'ஒளி வணக்கமே இந்துமதம்' என்ற தலைப்பில் குருதேவர் வெளியிட்ட கட்டுரையின் முதல் பகுதி.//

**"இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்."**



"... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் புதுமை விரும்பி, புரட்சிச் சிந்தனையாளர், சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகலவன், அறியாமை இருளகற்றும் ஆதவன், சிறந்த வரலாற்றுப் பேராசிரியர், புதிய அரசியல் தத்துவங்களை உருவாக்கிய அரசியல்வாதி, தீவிரமான சமுதாயச் சீர்திருத்தவாதி, சமயத்தின் பெயரால் உள்ள மடமைகளைச் சாடிடும் துணிவு மிக்க புரட்சிவாதி; போர்க்கலையில் திறமையும், உடல் வலிமையும் மிக்க மாவீரர், ..."

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org